உ

# சண்முகநாதன்.

[REGISTERED AT THE G·P·O· AS A NEWSPAPER]

# SANMUKANATHAN.

மாசமிருமுறை பிரகடனமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப்படும்.

பத்திர விகிதம்.

| | | |
|---|---|---|
| உள்ளூருக்கு ஆல 1-க்கு | ரு. | 1-50 |
| வெளியூருக்கு | ,, | ,, 2-00 |
| தொலைவாய்ப்பகுதிக்கு | | ,, 2-50 |
| தனிப்பிரதி | | சதம் 6 |

விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| முதன்முறைக்கு. | ரு.—ச. |
| ஒரு கலத்துக்கு | 6-00 |
| அரைக்கலத்துக்கு | 3-00 |
| கால்கலத்துக்கு | 2-00 |
| வரி 1-க்கு | —8 |
| அடுத்த முறைக்கு அடி அரைவாசி. | |

மலர் 5. யாழ்ப்பாணம், நள ஆல வைகாசிமீ 31 உ (13—6—16) இதழ் 16

உ
குசமயம். [நேர

சங்கரன்றன் சால்பினுந் சண்முகநாதன்பெய
மங்குநமாம் பத்திரமும் மெக்காளுக்—துக்கமுடன்
உள்ளசியங்களிலே மையுதிரெக்கும்பல்லிப்ட
வள்ளவன்றுனே அன்னபாம்.



## சண்முகநாதன்.

யாழ்ப்பாணம்—நள ஆல வைகாசிமீ 31 உ

### சைவவித்தியாசாலைகளின் நோக்கமென்ன?

—(0)—

நமது யாழ்ப்பாணத்திலே யுள்ள நாடுகள் நகரங்கள் கிராமங்கள் தீவுகள் முதலிய எவ்விடங்களிலும் புதிது புதிதான நீண்ட பெயர்களோடு காலத்துக்குக் காலம் புதிதுபுதிதாக இங்கிலிசு வித்தியாசாலையென்றும் தமிழ் வித்தியாசாலையென்றும் அங்கிலசுபாஷா வித்தியாசாலையென்றும் சைவவித்தியாசாலைகள் மிகப்பல தோற்றுவதை இக்காலத்துப் பலபத்திரிகைவழியாலும் பிறவாற்றாலும் அறியலாம். ஐம்பதுவருஷம் நூறுவருஷங்களுக்குமுன்னேயே தொடங்கிப் பிறசமயத்தவர்களாலும் சைவர்களாலும் தொடங்கி நடத்தப்படுவனவாகிய வித்தியாசாலைகள் அநேகம் ஆங்காங்கே மலிந்து கிடப்பவும் சைவவித்தியாசாலைகள் இடையிடையே புதிதாய்த் தோற்றக்காரணம் யாதோ என்றால் "இருப்பனவாகிய சைவவித்தியாசாலைகள் சைவம் வளர்க்கத் தகுதியுடையனவல்ல பிறசமய வித்தியாசாலைகள் சைவசமயத்தை அமிழ்த்திவிடுகின்றன. ஆதலால் "அவசியமாகச் சைவசமயத்தை எங்கள் பிள்ளைகளுக்குப் படைக்கக்கூடிய சைவவித்தியாசாலை இவ்விடத்திலிருக்கத்தான் வேண்டும்" என்ற சமயோசித சாதுரியவார்த்தை வருவதும் நாமனைவரு மறிந்ததே. சைவம்வளர்க்கவெனத் தோற்றிய வித்தியாசாலைகளிலே எவ்வாறு சைவம் வளர்க்கப்படுகின்றது என்பதும் பிறமத வித்தியாசாலைகளுக்கும் சைவ வித்தியாசாலை யென்றுள்ளவற்றிற்குமுள்ள சமய தாரதம்மியங்களைச் சிறிதாராய்வோம். கிறிஸ்த பாடசாலைகளிலே படிக்கும் பிள்ளைகளுள்ளே 100-க்கு 90-பேர் சைவப்பிள்ளைகள். சைவவித்தியாசாலைகளிலே படிக்கும் பிள்ளைகள் முழுப்பேரும் சைவப்பிள்ளைகள். கிறிஸ்த பாடசாலைகளிலே கணிதம், சரிதம், பூமிசாத்திரம், இலக்கணம், இலக்கியம், எழுத்து என்னும் பாடங்கள் உண்டு. கிறிஸ்த வித்தியாசாலைகளிலே சைவ உபாத்தியாயர்களைக் காண்டல் மிக அரிது.

சைவவித்தியாசாலைகளிலே கிறிஸ்த உபாத்தியாய குமாரங்களைக் காண்டல் மிக எளிது. கிறிஸ்த பாடசாலைகளிலே உள்ள வாசிப்புப்புத்தகங்கள் கிறிஸ்தவர்களா லியற்றப்பட்டனவும், கிறிஸ்தசமயபோதம் புதைந்தனவுமாக விருக்கும். சைவவித்தியாசாலைகளிலே யுள்ள வாசிப்புப்புத்தகங்கள் எச்சமயத்தவர் செய்தனவென்றாலும், எச்சமயபோதம் போதித்துள்ளனவென்றாலும் அவையெல்லாம் பேதம்பாராது ஏற்றுக்கொள்ளப் பட்டன. சைவர்களா லியற்றப்பட்டனவும் சைவசமயபோதம் போதிந்தனவுமான புத்தகங்கள் கிறிஸ்தபாடசாலைகளில் இல்லை. கிறிஸ்தவர்களா லியற்றப்பட்டனவும் கிறிஸ்தசமயபோதம் போதிந்தனவுமான வாசிப்புப் புத்தகங்கள் சைவவித்தியாசாலைகளிலுண்டு. கிறிஸ்தபாடசாலைகளிற் படிக்கும் சைவப்பிள்ளைகளுக்குக் கிறிஸ்தசமயபோதனையுண்டு. சைவவித்தியாசாலைகளிற் படிக்கும் பிள்ளைகளுக்குச் சைவசமயபோதமில்லை. இங்ஙனமேயாமாயின் சைவர்கள் தாபித்த வித்தியாசாலைகள் சைவவித்தியாசாலையாவது எப்படி? இவ் வித்தியாசாலைகளாலே சைவப் பிள்ளைக்கு ஆம்பயன் என்ன? ஒன்றுமில்லை. இனி இவ்வித்தியாசாலைகளைத் தாபிக்கும் அதிபதிக்குடைய நோக்கம் என்னவென்று பார்ப்போம். வித்தியாசாலை தாபித்தலும் சைவசமயபோதஞ் செய்தலும் பெரும் புண்ணியமென்று அறிந்துதான் தாபித்தார்களா? இல்லை.

பள்ளிக்கூடமொன்றைத் தாபித்தால் ம-ா-ா-ஸ்ரீ. அந்த வித்தியாசாலை மனேஜர் என்னும் சுமைதாங்கலாம். அரசினருதவிப் (கிறான்ற்) பணத்தைப் பங்கிட்டுக் கணக்கெழுதி உபாத்தியாயர்களுக்குச் சிலசம்பளங் கொடுக்கும்பொழுது அவர்கள் எழுந்து இருகாநீட்டிப் பெற்றுக்கொண்டு துதிப்பார்கள். ஊரிலும் தருமவான் என்றொரு பேர்கிளம்பும். அடிக்கடி ஊரவர்களைப்பார்த்து "உங்கள் பிள்ளையை ஏன் கிறிஸ்தவபாடசாலையில் விடுகிறீர்கள்? சீ! சீ! சைவர்களா யிருந்தும் நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்தவபாடசாலைக்கு விட்டால் நாங்கள் சைவசமயத்தை வளர்ப்பதெப்படி?" என்று வாய்கொண்டமட்டும் பறைசாற்றலாம். என்னும் இந்நோக்கங்களே யன்றிச் சைவசமயத்தைக் குறித்த எண்ணம் எட்டுணையேனும் இல்லை. இவ்வதிபதிகளுக்குச் சைவமென்பதுந் தெரியாது. தெய்வமென்பதுந் தெரியாது. இவர்களுள்ளே குதிரைக்குளம்பும் வயிரக்கடுக்கனும் சாயவேட்டியும் சரிகைச்சால்வையும் பட்டுக்குடையும் குந்திச்செருப்பும் காற்படிவிபூதியுந் தாங்கிய அதிபதிகள் தங்கள் இரண்டு புத்திரிகளையும் மூன்றுபுத்திரிகளையும் நான்கு புத்திரிகளையும் முக்காற்சம்பளம் அரைச்சம்பளம் காற்சம்பளம் இறும் என்று பேசிக் கிறிஸ்தவர்களது கிறிஸ்தபாடசாலைகளிற் சேர்ந்து ஈனசனரால் சமைக்கப்பட்ட பொரித்த மீனும் புசித்தலும் உண்டு சைவமும்மறந்து தெய்வமும் மறந்து ஒழுக்கமும் மறந்து வழக்கமும் மறந்து கிறிஸ்துவை நம்பும்படி அனுப்பிவிட்டு அயலிலுள்ள ஏழைகளைப்பார்த்து "மடைச்சனங்களே ஏன் உங்கள் பிள்ளைகளை எங்கள் சைவப்பள்ளிக்கு விடவில்லை" என்று பெலமாகப்பேசிச் சைவம்வளர்ப்பவர்களும் பலர் உளர்.

யாழ்ப்பாணத்திலேயுள்ள சைவவித்தியாசாலைகளிலே பன்னெடுங் காலம் உரிமை யொடுபடித்த வாலிபனொருவன் பிறதேசஞ் சென்று அங்கேயுள்ள கிறிஸ்த வித்தியாசாலையிலே சேர்ந்த சில மாசங்களுக்குள்ளே பரிசுத்தாவிபுகுந்து கிறிஸ்தாவேசங் கொள்வானாயிருந்தால் எங்கள் சைவ வித்தியாசாலைகளிலேயுள்ள சமயபோதவன்மை பேசவும்படுமோ?

இன்னும் எங்கள் சைவவித்தியாசாலைகளிலே படிக்கும் சைவப்பிள்ளைகளிடத்திலே "முதலைவாய்ப்பட்ட பிள்ளையைச் சிலவருடங்களின்பின் அழைத்தவர் யாவர்?" என்றால் அவர்களுக்குத் தெரியாது. கிறிஸ்தபாடசாலையிற் படிக்கும் சைவப்பிள்ளைகளிடத்திலே "திமிங்கிலத்தின்வாய்ப்பட்டு மூன்றுநாள் கரையிலே கக்கப்பட்டவன் யாவன்?" என்றால் உடனே எங்கள் சைவப்பிள்ளைகள் "யோனான்" என்று தடையின்றிக் கூறுவார்கள்.

எச்சமயத்தவனு மிருந்தாலும் ஒருவன் தன் சமயலக்கண மறியானாயின் அவன் அச்சமயத்தவனாகான். (வரும்)

### சண்முகநாதன் றன்னருள்விலாசம்.

—(0)—

அஞ்சுமுகந்தோன்றி லாறுமுகந்தோன்றும்
வெஞ்சமரிற் றோன்றில்வேறோன்றும்—நெஞ்சில்
ஒருகாலினைக்கி லிருகாலுந்தோன்றும்
முருகாவென்றோதுவார்முன்.

இவ்வெண்பா கற்பொறாய்ப்பிற் சிறைவிடாத நக்கீரராற் சொல்லப்பட்டது.

முருகா என்னுந் திருநாமத்தை இடைவிடாது மெய்யன்போடு செபிப்பவர்க்கு எத்துணைப் பேரிடர் வரினும் அவற்றையெல்லாம் முருகபிரானே முன்வந்து நீக்கியருள்வர் என்பது சாரம்.

இதற்குதாரணமாக ஒரு சிறு சரிதங் கூறுவாம். "தண்ணிருங் காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவதுஞ்சோழ மண்டலமே" எனக் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பராற் புகழப்பெற்ற சோழவளநாட்டிலேயுள்ள சுப்பிரமணிய தலமொன்றிலே வேளாளன் ஒருவனிருந்தான். அவன் முருகபிரானிடத்திலே மிக்க பக்தியுள்ளவனாய்த் தன்கற்பிற்சிறந்த மனைவியோடு கூடி இல்லறத்தை நடாத்திவருநாளில் சுப்பிரமணியக்கடவுளது திருவருள்வசத்தால் அவனுக்கு ஒரு புத்திரிபிறந்தாள். அப்பெண்ணுக்கு முருகம்மை என நாமகரணஞ்செய்தான். அவளும் எப்பொழுதும் முருகநாமத்தையே சொல்லிக்கொண்டும் முருகபிரானிடத்திலிருந்த பக்தியுடையவளாயும் இருந்தாள். மணப்பருவம் வந்தடுத்ததும் தந்தைதாயர் தங்குலத்துள்ளானொருவனை அவளுக்கு விவாகஞ்செய்து வைத்தார்கள். முருகம்மையார் தங்கணவனோடு கூடி இல்லறத்தைச் செவ்வனே நடாத்திவருநாளில் சிலநாள் கழிந்தபின்னர், அயற்கிராமத்திலுள்ள தன்கணவனது வீட்டிலே கணவனோடு சென்று வசித்து அங்கேதானே தன் இல்லறத்தை நடாத்திவந்தாள். அவள் எக்கருமத்தைச் செய்தாலும் என்னவத்தையிலிருந்தாலும் முருகதிருநாமபாராயணத்தை மறந்துவிடவில்லை. சதாகாலமும் அதனை யுச்சரித்துக்கொண்டேயிருந்தாள். இவ்வாறு அவள் முருகா! முருகா!! என்று உச்சரித்துக்கொண்டே வருநாளில் முருகன் என்னும் பெயருடைய ஆர்த்தவாசிய னொருவன் அவள் வீட்டுக் கடுத்த வீட்டி லிருந்தானாதலால் அடிக்கடி முருகாவென் றழைத்த சத்தஞ் செவிப்படத் தன்மேலாசைகொண்டுதான் அவள் தன்னை யழைக்கிறாள் என்று எண்ணினான். "இம் முருகநாமத்தைப் பிறர் காதில்விழாவண்ணஞ் செபித்தாலே அமையும் உரத்துக் கூவாதே" என்று அவளது கணவன் அவளை எச்சரிக்கைசெய்வதும் இடைக்கிடை யுண்டு. இதையும் அந்த ஆர்த்தன் முருக னறிந்தான். அறிந்த வுடனே, "ஓகோ இவள் என்மேற்கொண்ட பேராசையினாலே என்னைக் கூவியழைக்க, அதுபொறாதகணவன் அவளைக்கண்டிப்பதாகவுங் கருதினான். இவன் இவ்வாறு விணெண்ணங்கொண்டு இப்படியிருக்க முருகம்மையாரது கணவன் ஒரு கருமத்திற்காக அயலூர்க்குப் போகுமாறு வீட்டி னின்றும் புறம்போந்தான். முருகம்மையார் வழக்கப்படி முருகா! முருகா!! என்று பாடினார். சமையம் பார்த்திருந்த ஆர்த்த முருகன் இதுவே தக்கசமயமென் றெண்ணி அவள் வீட்டு வாயிலில் நுழைந்தான். அதிசமீபத்திலே தானே வழிக்கொண்டுசென்ற முருகம்மை கணவன் முருகன் திருவருளாலதுகண்டு பொறுமை யடைந்து கூரியகத்தியொன் றெடுத்து முருகம்மையாரது கையைவெட்டினான். கையிழந்த அம்மையார் "முருகா! ஏழைக்கு அருள்புரி" என்று அலறினார். உடனே முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் அவள் முன்னர் தோன்றி அவளது கையை முன்போலாக்கி "நீ நம்மீது வைத்த அன்புக்கு நாம் மிக மகிழ்ந்தோம். நமது பதவியை ய

டைந்து நந்தேவியருக்குக் குற்றேவல் செய்து கொண்டிருப்பையாக" என்றருளிச்செய்தார். அதுகேட்ட முருகம்மையார் போனந்தப் பெருங்கடலில் மூழ்கியவராய் நின்று, மூவருமாகி நின்ற மூர்த்தியே, சூரசங்காரா, அடியேனது நாயகனையும் ஆண்டருளல்வேண்டும், என்று பிரார்த்திக்க, பிரானும், "அங்ஙனமாருக" என்றருள் செய்தார். பூவொடு சேர்ந்த நாரும் திருமுடியேறியதுபோல முருகம்மையாரது கணவனும் ஸ்கந்த பதவியெய்தினன்.

இச்சிறு சரித்திரத்தினுலே முருக திருநாம பாராயணத்தின் பெருமை இத்துணைத்தென்று விளங்குவதாயிற்று.

(தொடரும்)

நல்லூர்வாசரும் உதயபானு பத்திராதிபரும்
சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகருமாகிய
ஸ்ரீமத். சு. சரவணமுத்துப்புலவரவர்கள்
சிவபதமடைந்ததனைக்குறித்து
அவர்மாணவருள்ஒருவராகிய
ஸ்ரீ. சின்னையபிள்ளை அவர்கள்கூறிய

## நேரிசை வெண்பா.

மன்னு மிராக்கதமே மாசியிரு பான்வெள்ளி
தன்னிலமா வாசை சதயநாள்—துன்னுமெழிற்
சற்குணஞ்சேர் நல்லைச் சரவணமுத் துப்புலவன்
நற்புவிவிட் டேகியதோர் நாள்.

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சுத்தமுறு மத்துவிதஞ் சேர்சித் தாந்தத்
தொன்னெறியாம் பிரசங்கஞ் சொல்லுஞ் சீலன்
வித்தகமாம் புராணங்கள் பலவுங் கற்றோன்
வேதாந்தப் போலிகளை வெருட்டுஞ் சிங்கம்
உத்தமமோ ஙைக்கவிகள் பலவுஞ் செய்தோன்
உயருதய பானுவினு லுலகிற் கீர்த்தி
வைத்தசர வணமுத்து நாமம் பூண்டோன்
வளருடலம் விடுகிலைமை மருவி னனே.

## நிலைமண்டல ஆசிரியப்பா.

சீர்திகழ் புவிமகட் கோர்திரு முகமெனப்
பேர்பெறு மீழப் பெருவள நாட்டின்
நன்னீ ராறு நாற்றிசை யோடவும்
உன்னருஞ் சிறப்புடை நன்மணி யுதிக்குந்
தன்னே ரில்லாத் தலம்பல நிலைஇத்
தென்மா மேருச் சிகாமு மோங்கும்
நன்னில மென்னு மிலங்கா பதியில்
ஊர்பல வுளவதி லூரெழு வென்னும்
பேருடை நகரே பெருநுத லாகும்
சீருடை யந்நகர் செய்தவ மதனுல்
பாரோர் புகழும் வேளாண் குலத்துச்
சுப்பிர மணிய சுகுண நற்பெய
ருத்தமன் றனக்கே யுதித்தனன் சுதனென
வுதித்தலச் சுதனுக் குரவோர் போற்றுஞ்
சரவண முத்தெனத் தனிப்பெய ரிட்டு
தந்தை மைந்தர்க் காற்றுறு நன்றி
முந்துறு நெறியின் முறைமைய தென்ன
வைத்திட லாமெனும் வள்ளுவர் மொழிவழி
உய்த்திடு முள்ளத் தெழுவா யாக
வயதைந் தாகி வளரந் நாளில்
வைத்தனர் கல்வி கற்க வென்றே
சித்தஞ் சிவன்பால் வைக்குஞ் சிறுவன்
ஆதியாச் சிரம விதியறிந் தொழுகியும்
உத்தம விலக்கண விலக்கிய தருக்கமும்
கற்றன னீரெட் டாண்டிற் பின்னர்
சுன்னையம் பதிக்குச் சுடரொளி யாமென
உற்ற நற்சம மாதி சொற்குணம்
பெற்ற நன்முரு கேசப் பெயர்புனை
செந்நாப் புலவன் றன்னை யடைந்து
பதிபசு பாச மெனப்பகர் மூன்றின்
திறலறிந் தவற்றின் திறம்பெறு பதியே
வரம்பிலா ஞானம் வளங்குமென் றுலக
ரறிந்திட வார்வமொ டுபக்தி யசிக்கும்
அந்நா ட்ன்னின் முன்னுள் விதியா
வில்லற மல்லது நல்லற மன்றென
விருநில மேத்தப் பெருநிலம் பொலியுங்
கல்லூ ரென்னுங் நற்பதி யதனிற்
தொல்லோ ரேத்த வில்லறம் புரிந்தே
யில்லற மார்க்கத் திதமுற வொழுகி
யிருளிரி யுதய பானுவென் றிலங்கிய
அரும்பத் திரிகைக் கதிபனு மின்று
அறமுத னன்கி னரும்பொரு ளிதுவெனக்
காதலா மலகக் கனியெனக் காட்டியும்
தன்கடன் றந்தை தவமுன் செய்தா
னிப்புல வோன்பெற வென்றிரு நிலத்தோ
ரெஞ்சா திசைக்கு மெழில்பெற நடந்து
வயதிரு முப்பா னுடனிரண் டாண்டின்
நிகழு மிராட்சதத் துத்தரா யணத்தில்
மேதகு பரனருண் மேவிய பதவி
யெய்தினன் சுத்தாத் துவித வைதிக
சைவசித் தாந்தப் பானுவென் றெவருஞ்
சாற்றிய சரவண முத்துப் பிள்ளையென்
றேற்றிய வாய்மை யிரும்புல வோனே

## பிழைதிருத்தம்.

சென்ற பத்திரிகையிற் பிரகடனஞ்செய்யப்பட்ட நிலைமண்டல ஆசிரியப்பாவில் நேர்ந்த பிழைகளைப் பின்வருமாறு திருத்திப்படிக்க.

5-ம்வரியில் கமலம் என்பதை கமலப் என்றும் 20-ம் வரியில் பேரறிவும் என்பதை பேரறிஞ என்றும், 25-ம்வரியில் உருத்தக என்பதை நலத்தக என்றும்திருத்திக்கொள்க

## யுத்தம்.

காம்ப்சயர் என்னுஞ்சண்டைக் கப்பலில் கப்பற் சேனையதிபதி லோர்ட்கிச்சினர் இருக்கும்பொழுது ஓர்க்னீஸ்தீவுகளுக்கணித்தாய் அவரிருக்க கப்பல் உடைவள்ளத்தா லுடைபட்டோ, சுரங்கத்திலகப்பட்டோ ஆழிவாய்ப்பட்டது. கப்பலிலிருந்தவர்களெல்லாரும் மோசம்போய் விட்டார்கள்.

உடனே காவற்கப்பல்களும், மறுகப்பல்களும் அவ்விடத்துக்குப் போயின, சில பிணங்களும், கவிண்டசில வள்ளங்களும் காணப்பட்டன. தேடிப்போயினவர்கள் ஒருவரையும் உயிருடன் கண்டெடுக்கவில்லை.

லோர்ட்கிச்சினர் இறந்தபடியால் மந்திரியார் அஸ்குவித் அவர்கள் போகவேண்டிய கருமங்களை நிறுத்தி, யுத்தமந்திராலோசனைச்சங்கத்தைக்கூடி இரண்டுமணித்தியாலம் யோசித்தார்கள். ருஷியசக்கிரவர்த்திசார் லோட்கிச்சினரை ருஷியாவுக்கு வரவழைத்திருந்தார். பொதுவாகச் சனங்களுக்கு லோட்கிச்சினர் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டதும், ருஷியாவுக்கு அழைக்கப்பட்டிருந்ததுந் தெரியாது. பூமியின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் தந்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. லோட்கிச்சினருடன் தாண்டுபோனகப்பலிலிருந்தவர்கள் கேணல்பிற்ஸ்கெருல்ட், பிறிக்காடியர் ஜெனறல் மாக்பேர்சன், ஓபிறயன், பல்கேரியரின்பழையமந்திரியார், சேர்டொனல்ட்சன், றபேட்சன் சில கிளாக்மாருமே,

சேனைக்கு அனுப்பிய சேதி.

இங்கிலாந்து அரசர் யுத்தமந்திரியார் இறந்ததைக் கேள்வியுற்று மிக விசனிக்கிறார். லோட்கிச்சினர் அரசாங்கத்துக்கு 45 வருஷம் ஊழியஞ்செய்துவந்தார். அவருடைய யூகத்தினாலும் கெட்டியினாலுமே எங்கள் சேனை இவ்வளவுதிறமான நிலைமையிலிருக்கின்றது.

சேர்மானியர் தங்கள் சனங்களைத் திருப்திபண்ணுவதற்காகவே கப்பற்சண்டைக்கு எத்தனித்தவர்கள். இங்கிலீசுக் கப்பல்கள் ஆயத்தமில்லாமல் நிற்கும்பொழுது அவர்களைச் சருவி அழிக்கலாமென்பதே சேர்மனியரின் கருத்து. அதுவாய்க்கவில்லை. இங்கிலீசருக்கே வெற்றியானது. கடற்சண்டையில் தாளாத கப்பல்களின்சேதம். கொல்லப்பட்டவர்கள் 162. காயப்பட்டவர்கள் 138. காணமற்போனவர்கள் 5.

பிறவிடங்களிலிருக்கும் பதினாறுவயசுச் சேர்மனியர் யாருக்குவந்து சேனைத்தளகர்த்தருக்கு அறிவிக்கும்படி கட்டளையானது. சேர்மனியரின் ஏய்பிங் என்னுங் குறுவிசர் வேறுகப்பல்களுடன் முட்டிச் சேதமடைந்தது. அதைக்கரைக்குக்கொண்டுவர இயலாமற்போனபடியால் தாங்களே தாட்டுப்போட்டதாக சேர்மனியர் தெரிவிக்கின்றார்கள். பால்றிக்கடலில் சேர்மனிய யுத்தக்கப்பலாவது உடைவள்ளமாவது ஒருகிழமையாகக்காணப்படவில்லை.

கோபன்கேகனிலிருந்து வரும் தந்தியொன்று பின்வருமாறு கூறுகின்றது.

சேர்மனியரில் கொல்லப்பட்டவர்கள் 800. காணப்படாதவர்கள் 4600, காயப்பட்டவர்கள் 1400.

சிபிறக்கிக்கு அணித்தாக ஓர் சேர்மனிய உடைவள்ளம் சுரங்கத்திலகப்பட்டுத் தாண்டுபோயினது,

கிரேக்க அரசாங்கத்தில் முன்மந்திரியாயிருந்த வெனிலோஸ் அவர்கட்சியிற்சேர்ந்த பிரதானமான சிலரையும்பிடித்துச்சிறைப்படுத்தயோசிப்பதாகச் சொல்லப்படுகின்றது-

சீனப்பிரசாதிபதி யுஆன்சிக்காய் இறந்துபோனர்.

லஸ்க் என்னுமிடத்தில் அவுஸ்திரியர் புதிதாக அரண்படுத்தி வைத்திருந்த இடங்களை ருஷியர் கைப்பற்றிக்கொண்டார்கள். முன் கைதிகளாக்கிய 40000 பேர்களுடன் இன்னும் 11,000 பேரைக் கைதிகளாக்கினர்கள். இக்வா, ஸ்ரைர் என்னும் நதிகளைக் கடந்து ஸ்ரிறிப்பாவுக்கு கீழ்ப்பாகத்தில் சத்துராதிகளின் பெலமான அரண்களை ருஷியர் பிடித்துக் கொண்டார்கள்.

## வர்த்தமானங்கள்.

காலநிலை:—வெயில் குறைவு, தென்றற்காற்று மிக மும்முரமாய் வீசுகின்றது, அகவிலை வரவர ஏறிக்கொண்டே வருகின்றது.

கோப்பரு:—கொப்பரு கண்டி ஒன்று 65-ரூபாவாக விலைப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்ப்பதிகம்:—இது தம்பைநகர்வாசர் பிரமஸ்ரீ. சிவ. சதாசிவஐயரவர்களால் நல்லூர்ச் சுப்பிரமணியக்கடவுள்பேரில் பக்திமார்க்கமாகப் பாடப்பட்ட ஒரு தோத்திர ரூபமாயுள்ளது. ஒரு விநாயகவணக்கவெண்பாவும், பத்து ஆசிரியவிருத்தமுங் கொண்டது. கலாநிதியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. வேண்டுவோர் ஐயரவர்கட்கெழுதிப் பெற்றுக்கொள்க. நமக்கனுப்பியபிரதியை மகிழ்வுடனேற்றேம்.

:—காரேறுநீலப்பாலையடி வாலவிக்கினேஸ்வரரூஞ்சல், மண்டூர்க் கந்தஸ்வாமி லீலாசங்கிரகமானவரூஞ்சல், மண்டூர்ப்பதிகம், மண்டூரிரட்டைமணிமாலை என்னுமிவைகளடங்கிய ஒருபுத்தகம். இவற்றைப் பாடியவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த புலோலி கிழக்கைச் சனனஸ்தானமாகவுடையவரும், மட்டுக்களப்புக் காரேறுநிலை வாசஸ்தானமாகவுடையவருமாகிய ஸ்ரீமத். பு. பொ. வைத்தியலிங்கதேசிகர் அவர்களே. இப்புத்தகம் பருத்தித்துறைக் "கலாநிதியந்திரசாலையில்" அச்சிடப்பட்டது. இதன்விலை சதம்-8 நமக்கனுப்பிய பிரதியை மகிழ்வுடனேற்றும்.

தமிழ்ப் பெருமாட்டி:—இப் பெயர்கொண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் முதலாங்கொருதியின் முதலாம்பகுதி நம்பார்வைக்கெட்டியது. இதிலே விளம்பரங்களுள்ளாக 19-விஷயங்கள் தக்க பண்டிதர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து வெளிப்படுவது. இதற்கு ஸ்ரீமான். வீ. ஆர். கேக்லட் அவர்கள் பிரதமபத்திராதிபராகவும், ஸ்ரீமான். சி. சுவாமிநாத செட்டியாரவர்களும், பிரமஸ்ரீ. வி. நாராயணசுவாமி ஐயரவர்களும் உபபத்திராதிபர்களாயிருக்கிறார்கள். இதன்வருடசந்தா ரூபா-3. எமக்கனுப்பிய பத்திரிகையை மகிழ்வுடனேற்று நம் பத்திரிகையை யனுப்பி வருவோம்.

புகையிலைச்சுருட்டுக்கொடுத்தவனுக்கு ஒருமாதமறியல்:—வெளிக்கடை மறியற்காரன் ஒருவனுக்கு புகையிலைச் சுருட்டுக்கொடுத்த ஒருவனுக்கு கோட்டிலே ஒருமாசமறியலூழியம் விதிக்கப்பட்டது.

முதல்வருட மகோற்சவக் கொண்டாட்டமும், பிரசங்கமும்:—பிறக்டர் ஸ்ரீமான். வி. காசிப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற, கிவியாதெரு ஸ்ரீபார்வதிவித்தியாலயத்தில், இந்த மீ 24உ (6-6-16) செவ்வாய்க்கிழமை சாயந்தரம் ஏழுமணிக்கு "ஜனாபிவிர்த்திச் சங்கத்தின்" முதல்வருட மகோற்சவக் கொண்டாட்டத்திற்காகப் பாக்கள் படிக்க; பிரசங்கத்திற்குச் சனங்கள் வரவர, ஷை கொண்டாட்டத்திற்காக, அச்சிடப்பட்ட 10-ப் பக்கங்கொண்ட புத்தகமொன்று கொடுக்க; நல்லூர் உபயவேதாகம பண்டிதர் பிரமஸ்ரீ. வே. கனகசபாபதி ஐயரவர்கள் ஷை சங்கம் விர்த்தியடையும்பொருட்டு உபந்நியாசஞ் செய்ய; வண்ணை நாவலர் கோட்டம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்துக், குறிப்புரைகூற; அத்துவக்காத் ஸ்ரீ. கா. அருளம்பலம் அவர்கள் குறிப்புரை கூறிப், பிரசாரகரவர்களுக்கும், அக்கிராசனாதிபதி அவர்களுக்குஞ், சபையோர்களுக்கும் வந்தனஞ்சொல்ல; வாழைப்பழம், மோதகம், முதலிய சிற்றுண்டிவகைகள், பிரசன்னராயிருந்தோர்க்கீய; தேவார பாராயணத்தோடு பிரசங்கஞ் சமாப்தியாயிற்று. ஷை சங்கம் மென்மேலும் விர்த்தியடையும்படி, சண்முகநாதன் றன்னளி புரிவாராக.

ஓர்பரிதாபமானமரணம்:—நேற்றைய தினம் தேவரிக் குழத்துக் கனித்தாயுள்ள ஓரிடத்தில் ஐந்துவயதுடைய சிறுகுழந்தை யொன்று வீட்டினுள்ளே நித்திரையாயிருக்க, அதற்கருகேயுள்ள, பனைமரமொன்று, வாயுபகவானின் கொடூரத்தால், வீட்டில் விழுந்து குழந்தையின் உயிரை இயமலோகமனுப்பியதாம். பரிதாபம்! பரிதாபம்!!

---

ஓடம்அமிழ்ந்தியது:— இந்தமீ 29-ந்திகதி திங்கட்கிழமை பூநகரியிலிருந்து நெல், வைக்கோல், முதலிய சாமான்கள் ஏற்றிக் கொண்டுவந்த வத்தையொன்று காற்றின்மிகுதியினால் கடலிலமிழ்ந்தியது. இதிலேறிவந்தவர்களை வேறோர் ஓடமொன்று காப்பாற்றியது.

---

தேசாதிபதியின் தரிசனை—நம் புதிய தேசாதிபதியாகிய சேர் யோன் அன்டர்சன் தம்புத்திரனுடைய மனைவியாரான மருமகளோடும் பரிவாரங்களோடும் நுவரெலியிலிருந்து விசேஷ றெயில்வண்டியிலே தலைமன்னார் வரையிலே சென்று மண்டபத்திலேயுள்ள காவல் மண்டபங்களைப்பார்த்துத் திரும்பி 2-ந்தேதி சாயந்தரம் ஐந்தரைமணிக்கு றயில்வேஸ்றேஷன்வந்து சேர்ந்தார். இவர் வருகைக்காக றெயில்வே ஸ்றேஷன்மாஸ்றர் மெல் கனகசபை அலங்காரங்கள் செய்வித்து மேடைக்குக் கம்பளமிடுவித்து எல்லாவற்றையும் வெகு சிறப்பாக்கி வைத்திருந்தார். தேசாதிபதிவந்தபோது ஏசண்டர் மெஸ். ஹோர்ஸ்பரோதுரை மற்றைய பெரிய உத்தியோகஸ்தர்களோடு வரவை எதிர்நோக்கி நின்று உபசரித்தேற்றார். அங்கு குழுமினோர்களையெல்லாம் ஏசன்றர் அறிமுகப்படுத்திவிட தேசாதிபதி அவர்களோடெல்லாங் கைகுலுக்கி இராணிமாளிகை சென்றார்.

3-ந்தேதிகாலை தேசாதிபதி திருநெல்வேலியிலுள்ள மாதிரிப் புகையிலைத்தோட்டத்தைப்பார்த்துத் திரும்பி மதியத் கூட்டத்துக்குப்போய் இராஜாவின் ஜெனனபெருநாட்பலனாக 250-மறியற்காரரை விடுதலையாக்கிவிட்டனர். அன்று சாயந்தரம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையுஞ் சுற்றி இராணிமாளிகைக்குவந்து அன்றிரவு 36-பேருக்கு விருந்திட்டு 4-ந் தேதிகாலை கொழும்புக்குப் பயணமாயினர்.

---

தூஷணைக்குத் தண்டனை:— கொழும்பிலே நடத்தப்படுகின்ற இஸ்லாம்மித்திரன் என்னும் பத்திரிகை ஐரோப்பிய பெண்களைக் காணப்போன இஸ்லாம்பெண்களைக்குறித்து தகாதவகையாய் அசப்பியமாகப்பேசித் தூஷித்தமையால் பத்திராதிபருக்கு கொழும்புப் பொலிசுக்கோட்டிலே மூன்றுமாச கடின வூழியமும் 50 ரூபாய்தெண்டமும்விதிக்கப்பட்டன. எதிரி அப்பல் கேட்டிருக்கிறார்.

---

மூன்றுமாத மறியலூளியமும்' 500 ரூ. தெண்டமும்:—காலியிலே கஞ்சாவைத்திருந்தஒருசோனகனுக்கு பொலிசுக்கோட்டிலே 3 மாசமறியலும் 500 ரூபாய்தெண்டமும் விதிக்கப்பட்டன.

---

தேங்காயெண்ணெய்:—இங்கிலாந்திலே தேங்காயெண்ணெய் தேவையாயிருப்பதால் மற்றமேலைத் தேசங்களுக்கு என்னநியாயத்தினாலாவது அனுப்பப்படாதென்று கட்டளையாயிற்று.

---

லோட்கிச்சினர்:—தற்போது நடக்கின்ற யுத்ததந்திரங்களுக்குத் தலைமையும் உயிருமாயிருந்துவந்தவரும் பழையுத்தங்களாடி விருதுபெற்றவருமாகிய லோட்கிச்சினர் சில விசேஷ ஆலோசனை சொல்லிக்கொடுப்பதாகச் சிலரோடு ருஷியாவுக்குப் போகும்போது அவரேறிய கப்பல் ஓர்க்னிதீவுகளுக்கு அப்பால் செருமானியரால் உடைபட்டு அழிவாய்ப்பட்டது. லோட்கிச்சினர் இறந்தது இங்கிலீஷ் அரசுக்குமாத்திரமோ? பிரான்சு ருஷியா இத்தாலி முதலிய அரசுகளுக்கெல்லாம் பெரிய துயரமும் நஷ்டமுமான சங்கதி. இவரிறந்தது இங்கிலீஷ் அரசினுள்ள நாங்களனைவரும் துக்கிக்க வேண்டியதே.

# சங்கீதத்திரட்டு.

—(:0:)—

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் மாணாக்கரின் மாணாக்கருளொருவராகிய, யாழ்ப்பாணம் ஸ்ரீமத். கா. கந்தையாபிள்ளையவர்களால் வெளியிடப்பட்ட சங்கீதத்திரட்டு முதலாம் இரண்டாம்பாகங்கள், வண்ணார்பண்ணை "சண்முகநாதன்" புத்தகசாலையிலும், வண்ணார்பண்ணை "சண்முகநாதன்" ஆபீசிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சங்கீதத்திரட்டில், சங்கீத வித்துவ ரெத்தினங்களாற் பாடப்பட்ட அநேகபாடல்களும், தாயுமானவர், இராமலிங்கசுவாமிகள் முதலியோராற் பாடப்பட்ட பலபாக்களும், திருப்புகழ் தேவார திருவாசகங்களும் தில்லானு தென்பாங்கு கீர்த்தனை முதலிய பலவித பாக்களும் அடங்கியிருக்கின்றன. இவை சங்கீதங்கற்பவர்களுக்கு அவசியம் வேண்டற்பாலன.

இதன் விலை விபரம்.

முதலாம்பாகம் ரூபா-1 சதம்-75.
இரண்டாம்பாகம் ரூபா-1 சதம்-75.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் எட்டாமிலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண்மேற்கு லெ. ரும. வெ. முத்துத்திருமேனிப்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம்பர் | ஞூ | மீ | உ | ரூபா. | அடைவுவைத்தவரின் ஊரும் பெயரும். | | அடைவுநகைகளின் விபரம். |
|---|---|---|---|---|---|---|---|
| 91 | 1915 | 2 | 13 | 45 | நீர்வேலி | நாகேந்திரர் சிவசப்பு | பொன்காதுபணி சோடி 1 |
| 140 | | 3 | 6 | 100 | தட்டாதெரு | கனகரெத்தினம் ஆறுமுகம் [சார் | பொன்சிங்கமுகக்காப்பு சோடி 1 |
| 149 | | | 13 | 55 | சோனகதெரு | சோனகதெரு மீராஞ்சாகிபு சிவத் | பொன்சவுடி 1 |
| 180 | | | 27 | 40 | புத்தூர் | வைத்திலிங்கம் கந்தையா | பொன் தாலிக்கொடி 1 [வளையல்8 |
| 262 | | 5 | 3 | 25 | நாவாந்துறை | வேலப்பு கொஸ்தின் [டி | பொன்நாட்டுச்சுடுக்கன்சோடி 1-ம் மோதிரம் 1 ஓட்டு |
| 266 | | | 5 | 50 | சேணியதெரு | சின்னையாச்செட்டி அப்பாவுசெட் | பொன் தொங்கல்ச்சரடு 1 |
| 269 | | | 6 | 80 | வண்கிழக்கு | கனகரெத்தினம் அப்பாக்குட்டி | பொன்சவுடி 1-ம் நாலுட்டுமணிக்கோர்வை 1 |
| 277 | | | 10 | 60 | சேணியதெரு | சுப்பிரமணியன்செட்டி சின்னையா | பொன்டிம்பிபதக்கத்துடன் கம்பிம்பூரானட்டியல் 1 |
| 287 | | | 15 | 100 | வண்கிழக்கு | இளையதம்பி நாகலிங்கம் [செட்டி | பொன்பட்டணக்காப்புசோடி 1-ம் மோதிரம் 8 |
| 333 | | | 29 | 500 | ஷை | சின்னத்தம்பி கதிரகாதி | பொன்சிங்கமுகக்காப்புச் சோடி 1-ம் சம்பணவிளசல் 4-ம் டிம்பிபதக்கத்துடன்சரட்டட்டியல் 1-ம் கல்கொண்டைப்பூ 1 |
| 334 | | | 29 | 300 | ஷை | ஷை | பொன்ஒத்தைக்குத்திருகில்லாத சிங்கமுகக்காப்பு சோடி 1-ம்பட்டணக்காப்புச்சோடி 1-ம் எழுகல்லட்டியல் 1 |
| 338 | | | 31 | 150 | பெருமான்கோவிலடி | பொன்னையா இரமலிங்கம் | பொன்கொலுசுக்காப்புச்சோடி 1-ம் தாயித்துக்கூடு தொங்கல்ச்சரடு 1 |

விற்பனவு—1916 ஞூ ஜுலாய்மீ 1ந்திகதிக்குச் சரியான நள ஞூ ஆனிமீ 18உ சனிக்கிழமை பகல் பத்துமணியளவில் ஷை கடைத்திண்ணையில் எடுபட்டநகைகேலமாகப் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வெர்தீஸ்பேஸ்தர் சி. ஐயம்பிள்ளை உடையார்.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்கட்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்]

### "சைவப்பிரசங்கம்."

—(:0:)—

நிகழும் நளஞூ வைகாசிமீ 9உ (22-5-16) திங்கட்கிழமை பிற்பகல் ஆறுமணிதொடக்கம் பத்துமணிவரைக்கும், சங்கானை மேற்குச் சைவப்பிரகாசவித்தியாசாலையில், ஓர் சைவப்பிரசங்கஞ் செய்யப்பட்டது. அவ்வித்தியாசாலையில், சைவப்பிரபுக்களும், வித்துவான்களும், மாணவர்களும், பிறருமாய் 500-பேர்வரையில் வந்தீண்டினார்கள். அத்தருணஞ் சபையோர் சம்மதப்படி, ஆரியதிராவிடவித்பன்னரும் ஷை வித்தியாசாலைச் சொந்தக்காரரும் மானேஜருமாகிய, பிரம்மஸ்ரீமத். அ. அருணாசலசாஸ்திரிகள். ஷை சாஸ்திரிகளவர்கள் புத்திரன், பிரமஸ்ரீ. அ. பஞ்சாதக்குருக்கள் அவர்களாலும் பிரம்மஸ்ரீ. எஸ். வீ. இரத்தினசாமிசர்மா அவர்களாலும் பக்ஷவாத்தியசகிதமாய் தேவாரபாராயணஞ் செய்யப் பிரசங்க மாரம்பமானது. முதலில், சைவசித்தாந்தசமயகோளரியும், "ஞானசித்தி" ப் பத்திராதிபருமாகிய, வித்துவான் ஸ்ரீமத். சி. தாமோதரம்பிள்ளை யவர்களால் "மானுடப்பிறப்பினுலெய்தும்பயன்" என்னும் விஷயம், சர்க்கரைப்பந்தரிற்றேன்மாரிபொழிந்தாற்போலப் பன்னூற்பிரமாணசகிதமாய்க் கற்றோரும் மற்றோரும் எளிதில் விளங்கிக்கொள்ளுமாறு சுத்தசெந்தமிழ் நடையில் நன்கு பிரசங்கிக்கப்பட்டது. அதன்பின், நவாலி ஸ்ரீமத். க. சோமசுந்தரம்பிள்ளை உபாத்தியாயரவர்களால் "தருமமேஜெயம்" என்னும் விஷயம் பன்னூற்பிரமாணசகிதமாய்க் கற்றோரும் மற்றோரும் எளிதில் விளங்கிக்கொள்ளுமாறு சபையோர்க்குக் கர்ணாமிர்தமாக வெகுசிறப்பாகப் பிரசங்கிக்கப்பட்டது. ஈற்றில் அக்கிராசனாவர்களினரிய குறிப்புரைகளுடனுந் தேவாரபாராயணத்துடனும் பிரசங்கஞ் சமாப்தியாயிற்று. இவ்வித்தியாசாலையிற்சென்றசித்திரைமீ 14உ (26-4-16) யிலுமோர் விசேஷ சைவப்பிரசங்கஞ் செய்யப்பட்டது. இவ்வண்ணமே மாசமொருமுறை தக்க சைவப்பிரசாரகர்களை வருவித்து இடைவிடாது சைவப்பிரசங்கஞ் செய்விக்கப்படும். மேலே கூறியவாறு இவ் வித்தியாசாலையில், சைவசமயப்பிரசங்கம் மாசமொருமுறை செவ்வனே நடைபெறவும், வித்தியாசாலை சிறந்து நன்னிலைக்கு வரவும் கிருபாமூர்த்தியாகிய விநாயகப்பெருமான் துணை யளிபுரிவாராக. சுபமஸ்து.

இங்ஙனம்:
கண்டெளித்தோன்.

யாழ்ப்பாணம் புத்தூர்
பிரபல கனதனவான்களுள்
ஒருவராகிய
ஸ்ரீமான். சி. பொன்னம்பலபிள்ளை
அவர்களுடைய
தேகவியோகத்தைப் பற்றிய
சுருக்கவல்ராறு:—

—:0:—

அநாதி பரமசிவ அடியார்கள் பாடிய திருவருட்பாடலான தேவாரத்திற் கூறப்படும் திருக்கேதீச்சரம், திரிகோணமலை என்னுமிரு சிவஸ்தலங்களையும், குகஅடியார் பாடிய திருப்புகழிற் சொல்லப்படும் கதிர்காமம் எனப்பெயரிய அரிய சுப்பிரமணிய ஸ்தலத்தையும், எனைய அரும் பெருஞ் சிறப்புகளையுமுடைய இவ் விழமண்டலத்திலே உள்ள உத்தரமாகாணத் திலே யாழ்ப்பாணத்தில் கற்றோரும், மற்றோரும் இனிது பாராட்டத்தக்க பல்வகைச் செல்வங்களாலும் நிறைந்து, சிறந்துவிளங்கும் புத்தூர்க்கிராமத்திலே புராதனகாலந் தொடங்கி காத்திரையினரும் போற்றும் பிரபலவமிசத்திலே உதித்த ஸ்ரீ. கதிரேசபிள்ளை சின்னத்தம்பிப்பிள்ளை அவர்களுக்கும், ஸ்ரீ. பூதத்தம்பிப்பிள்ளை புத்திரியாகு ஸ்ரீ. தெய்வானைஅம்மைப்பிள்ளை அவர்களுக்கும் அருந்தவப்புத்திரராயவதரித்த ஸ்ரீமான். சி. பொன்னம்பலபிள்ளை அவர்கள், தம்ரோகாரணமாய் நிகழும் நளஞூ சித்திரைமீ 31உ (13-5-1916) சனிக்கிழமை காலமே, சகம் அநித்தியமென மனதில்சிந்தித்து, பரலோகப்பிராப்தி அடைந்தனர். இவர் அவ்வூரில் வசிப்பவரான ஸ்ரீ சி. சங்கரப்பிள்ளை அவர்களுக்குச் சகோதரரும், யாழ்ப்பாண அரசாங்க வைத்தியசாலையில் வைத்திய உத்தியோகத்தருக்கு, உதவியாய்க் கடமைபார்த்து வருபவருள்ஒருவரான ஸ்ரீ. வி. பொன்னையபிள்ளை அவர்களுக்குமாமனாரும், ஸ்ரீ. ச. சேதுபதிஅவர்களுக்கு சிறியதந்தையாருமானவர். இவர் இந்துசாகியத்தார்க் கெல்லாம் நன்முன்மாதிரிகளைஸ்தாபித்த ஓர்அரியபிரபுசிகாமணி. முதன்முதல் புசதூரில் வைத்தியசாலை, தவாற்கந்தோராதியாயிவற்றை அரசாங்கத்தார் பொதுஜனநன்மைக்காக ஸ்தாபித்தல் வேண்டுமென மனுப்பத்திரம் அனுப்பி, அவ்விஷயத்தில் சித்தி எய்திய பரோபகாரசீலர் இவரே. இவர் யாழ்ப்பாண வியாபார சங்கத்தலைத்தவருள் ஒருவர். பூரியருள் ஒருவர் "சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க் கணி" எனும் உத்தரவேதவாக்கைத் தாம் யாண்டும் அநுசரித்து எட்டுணையேனும் வழுவாதொழுகல் வேண்டுமென கற் சித்தாந்த முற்றவரும், எக்காரியத்திலும் ஒரு பகுதியாரையும் நாடாது, நடுநிலைமையாகவிருந்து, தம் சான்றாண்மைகுன்றாது குன்றனையபொறையுற்ற விசயவரும் இவரே. இவர், அவ்வூர்ப் பிரபல குலதிலகருள் ஒருவர். இவர், சன்மார்க்கம், பேராண்மை, தண்ணளி, சாந்தம், செல்வம், வீரியபுத்தி, காரியசித்தி, யுத்தி, சிக்குப்புத்தி, அடக்கம், சிவஇரக்கம் முதலிய நற்குணநிசயங்களால் நிறைந்து சிறந்தவர். இவர் ஆங்கில தமிழ்ப்பாஷைகளை கண்டே கற்றவர். இன்னோரன்ன சிறப்புகளை உற்றுவிளங்கிய இப்பிரபல பிரபுசிகாமணியை இழந்து துன்புறும் இவருடைய அரியசகோதரர், தாயார், மருமகனார், மக்களாதியவருடனும், எளையசுற்றமித்திரருடனும் நாமுமனுதாப முறுகின்றேம்.

இங்ஙனம்,
ஓர்கடிதர்.

---

## சிவ புண்ணியம்.

சிவபுண்ணியம், அபுத்தி பூர்வ சிவபுண்ணியம், புத்திபூர்வ சிவபுண்ணியம், உபாயச்சரியை உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மைச்சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மை ஞானம் எனப் பத்து வகைப்படும். இவற்றுள் உபாயச் சரியை முதற் சொல்லப்பட்ட எட்டும் தனித்தனி ஒவ்வொன்று நன்னான்காய் முப்பத்திரண்டு வகைப்பட்டு மேலும் பலதிறப்பட விரியும்.

இது சிவபுண்ணிய மென்று மனதிலெண்ணாது செய்வது அபுத்தி பூர்வ சிவ புண்ணியம். இது சிவ புண்ணியமென்று மனதிலெண்ணிச் செய்வது புத்தி பூர்வ சிவ புண்ணியம். அதுவு ம் புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வ தென்றும் பத்திகாரணமாகச் செய்வதென்றும் வேறிருவகைப்படும். உபாயசரியை முதலிய நான்கும் பத்திகாரண மாகாது புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்யப் படுவன

உண்மைச் சரியை முதலிய நான்கும் பத்தி காரணமாகச் செய்யப்படுவன. அவற்றுட் சரியையிற் சரியையாவது திருக்கோயில் அலகிடல் முதலியன. இதனை. "அலகா லெமக்காமலர் மாலைகளாக்கலம் மலர்பறித்தலம்மலரா ற்—றுவிலாவணைகளாக்கலம் மலர்பறித்தலம் பெரும்புகழ் சாத்தார் பல சமைத்தருணைப்பிலெம் பெரும்புகழ் சாற்றலன்புடனும்—மேவுமாலய மலகிடன்மெழுகல் விளக்க நல் விளக்கிடுதலெம் மடியார்க்—கேவலாணவை செய்யு மிச்சரியை யியற்றவல்லவரெம்முலகிருப்பார்" என்றும், "நிலை பெறுமா றெண்ணுதியே நெஞ்சே நீவா நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு புலர்வதன்முனலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்-தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சயபோற்றி போற்றியென்றும் அலை புனல்சேர் செஞ்சடையெம்மாதி யென்றும் ஆரூராவென் றென்றே யலறு நில்லே" என்றும் போந்தவற்றாலறிக. சரியையிற் கிரியை இருபத்தைந்து மகேஸ்வர வடிவங்கள் விக்கினேசுரக்கடவுள் முதலிய ஆவரண மூர்த்திகளில் ஒருமூர்த்தியைப் பூசித்தல்.

சரியையில் யோகமாவது, அவற்றேறு மனதிலே உருத்திர மூர்த்தியைத் தியானிப்பது.

சரியையில் ஞானமாவது, அத்தியானபாவனையின் றடிப்பினால் ஓரனுபவ உணர்வு நிகழ்தல்.

கிரியையிற்சரியையாவது, சிவபூசைக்கு வேண்டப்படு முபகரணங்களெல்லாஞ் செய்து கொள்ளல்.

கிரியையிற் கிரியையாவது, சிவாகமங்களில் விதித்தபடியே பஞ்சசுத்தி முதலாகச் சிவலிங்கத்திலே செய்த பூசை.

கிரியையில் யோகமாவது, பூசை, ஓமம், தியானம் மூன்றற்கும் அகத்திலே மூவிடம் வகுத்துக் கொண்டு செய்யும் அந்தரியாக பூசனை.

கிரியையில் ஞானமாவது, அவ்வந்தரியாக உறைப்பின் கணிகழு மோரனுபவ உணர்வு.

யோகத்திற் சரியையாவது, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், என்னும் நான்குமாம்.

யோகத்திற் கிரியையாவது, பிரத்தியாகாரம், தாரணையுமாம்.

யோகத்தில் யோகமாவது, தியானம்.

யோகத்தில் ஞானமாவது, சமாதி.

இனி இந்த யோகமும் சகள நிஷ்களங்களைப்பற்றி நின்று செய்யுஞ் சாலம்ப யோகமும், நிஷ்களத்தைப் பற்றி நின்று செய்யும் நிராலம்பயோகமும் என்றிருவகைப்படும். இனிக்கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கனுள்ளே கேட்டல் ஞானத்திற் சரியை, சிந்தித்தல் ஞானத்திற் கிரியை, தெளிதல் ஞானத்தில் யோகம் நிட்டைகூடல் ஞானத்தில் ஞானமென்றறிக. இனிப் புகழ் முதலிய உலகப்பயனைக் கருதிச்செய்யும் உபாயச்சரியையிற் சரியைமுதலாக உபாய ஞானத்தில் ஞானமிறுதியாகவுள்ள பதினறுவகையினின்றும் பலவேறு வகைப்பட விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் எவ்வாறெனில், அவ்வவற்றிற்கேற்பக் காலாக்கினி யுருத்திரர் புவனமுதற் குணதத்துவ மத்தகத்திற் சீகண்ட ருத்திரர் புவனத்தின்கீழுள்ள உருத்திரரீறான அவ்வப்புவன பதிகளுலகத்திற் சாலோகமுதலியவற்றைப் பெறுதலாம். பத்திகாரணமாகச் செய்யப்படும் உண்மைச்சரியையிற் சரியைமுதல் உண்மையோகத்தில் ஞானமீறுகிய பன்னிருவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியுஞ்சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பச் சீகண்டபுவன முதற்சுத்தவித்தைக்கும் கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகமுதலிய பாமுத்திகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற் சரியை முதலிய மூவகையினின்றும் பலவேறு வகைப்படுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பச் சுத்தவித்தைமுதலிய அதிகார தத்துவ போகதத்துவங்களில் விளங்கும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோகமுதலிய அபரமுத்தியைப்பெறுதலாம். இனிப்பல வேறுவகைப்பட விரியு ஞானதின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பாமுத்தியே பயனென அறிக.

இனிச்சரியை முதலிய வற்றினியல்பு சிறிதுகூறுவாம். அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் பரிபக்குவமுடைய உயிர்கள் சோபானமுறையினால் உணர்ந்துவழிபட்டு உய்யும்பொருட்டு உருவம், உருவருபம், அருவம் என்னும் மூன்று திருமேனி கொண்டருளி அத்திருமேனிகளிலே வழிபடுமுறைகளையும் வேதாகமங்களில் வகுத்தருளினர். இம்மூவகைத் திருமேனிகளுள்ளே புறத்தொழின்மாத்திரையானே உருவத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு சரியையெனப்படும். இம்மார்க்கத்திற்குத் தாசமார்க்கம் என்று பெயர்

(வரும்)

இங்ஙனம்

சிவ. சண்முகநாதன்

சம்புகுண்டம்.

## வைத்தியம்.

"நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்" வைத்தியசாஸ்திரத்தை வடநூலார் ஆயுள்வேதமென்பர். பூர்வ ஆரியர்கள் வேதத்தைப் போற்றியதுபோலவே இந்த ஆயுள்வேதத்தையும் போற்றிவந்தார்கள். இது சர்வான்மாக்களுக்கும் இன்றியமையாதது. இவ்வேதம் பூமியிற் பிரசித்திபெற்றவழி யெப்படியென்றால் பிரமதேவர் லோகோபகாரமாகத்தமது புத்திரனுகிய தக்கனுக்குபதேசித்தார். அவர் அஸ்வினிதேவர்களுக்கு உபதேசித்தார். அவர்கள் இந்திரனுக்கு உபதேசித்தார்கள். இந்திரன் பரத்துவாசமுனிவருக்கு உபதேசித்தான பரத்துவாசமுனிவர் பூவுலகத்திலிருந்து ஆத்திரேயர்முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தார். இவ்வாறாகவே வைத்தியமானது பூமியிற்பரவியது. இது ஆயுர்வேதசங்கிதையெனவும்படும். இச்சங்கிதையிலே சூத்திரஸ்தானம், சாரீரம், நிதானம், சிகிச்சை என நான்கு பகுதிகளுள. சிருட்டி தொடக்கமாகப் பிண்டோற்பத்தி வரையும் உள்ளவிஷயங்கள் சூத்திரஸ்தானத்தில் உள்ளன. சரீரயந்திரங்களின் அமைப்பும், அவற்றின் தன்மையும்சாரீரப்படலத்திற் பிரித்துக்கூறப்பட்டிருக்கின்றன. நோய்களின்பேதங்களும் அவற்றினியல்புகளும் சாத்திய அசாத்தியநிலைகளும் நிதானப்படலத்திற் கூறப்பட்டிருக்கின்றன. மேலேகூறப்பட்ட நோய்களுக்குச் செய்யுஞ்சிகிச்சைகளைப்பற்றி சிகிச்சைப்படலத்திற் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள்ளே இறுதிக்கணுள்ளதாகிய சிகிச்சையும். தைவம், ஆசுரம், சித்தம், மானுஷம், என நால்வகைப்படும். அவற்றுள்ளே தைவமாவது ரசவித்தையினாலே முடிவது. ஆசுரமாவது. சத்திரமிட்டறுத்தல் பழுக்கக்காய்ச்சிய இருப்புக்கோலாற்சுடுதல், காரம்வைத்தல் முதலியவற்றால்முடிவது. மானுஷமாவது இலை தழை காய் கனி கொம்பு வேர் முதலிய ஓடதிகளாற்சாதிப்பது. இவற்றினியல்பெல்லாம். வாக்படீயம், மாதவீயம், சல்யதந்திரம் ரஸரத்னசமுச்சயம், ஸ்ரீகண்டீயம், ரசரத்னாகரம் முதலியநூல்களிலேபரக்கக்காணலாம். இவற்றின்விரிவெல்லாம் பின்னேரோர்முறை கூறவிருக்கின்றேனுதலால் இதனை இவ்வளவில் நிறுத்திநம்மூர வைத்தியவிஷயமாகச்சிலகூறுவாம்.

சம்பாதகண்டத்திலேரசவைத்தியத்தை சத்தியசித்தர் யோகிகள் தாம்மிகஅருமையாகக் கையாண்டுவந்தார்கள். இக்காலத்திலே ரசவைத்தியம் உண்டு என்றுசொல்வது கூடாதகாரியம். சத்திரமிட்டறுத்தல் முதலியஆசுரவைத்தியம் பெரும்பான்மையாய் நடைபெற்றேவருகின்றது. மாந்திரீகமும் மிகப்பெரும்பான்மைபோல வைத்தியர்களாலும் மிகச்சிறுபான்மை உண்மையான மாந்திரீகவைத்தியர்களாலும் நடைபெறுகின்றது. மானுஷவைத்தியமே பெரும்பான்மையாக நம்மவர்களாற் கையாளப்படுவது. தைவம், சித்தம்ஆசுரம், மானுஷம்என்னும் நான்கையும் நன்கறிந்தவர்களே வைத்தியரெனப்படுவர்" சுஸ்ருததாஸ்ரூதோயேன சரகோ நாவலோகித வாக்பாதோ வாக்படஸ்ச்சைவ சதம்வைத்ய உச்யதே.என்றவாக்கியப்படி' சுஸ்ருதம் கேளாதவனும், சரகம்பாராதவனும் வாகடம்வாசியாதவனும், வைத்தியனுகான். இவை இப்படியிருக்க, பரம்பரையாக வைத்தியன்மகன் வைத்தியனென்றில்லாமலும், தக்க குருவினிடத்திலே குறித்தகாலம்வரையுமிருந்து கற்றுக்கொள்ளாமலும், கடைப்புத்தகத்திற்சொல்லியிருக்கும் இரண்டொருபாட்டுகளை ஒட்டுருப்பண்ணிக்கொண்டு செய்பாகமோ கைபாகமோ சுத்தமில்லாமலும், வியாதியின்குணம், பெயர்முதலியன அறியாமலும் பொருளாசை ஒன்றையே குருவாகக் கொண்டு நோய் ஒன்றுயிருக்க மருந்தொன்றாகவும் அனுமானம்வேறொன்றாகவும் கொடுத்துப் பணத்தைப் பறித்துக்கொண்டு சனங்களை மோசம்பண்ணத் தொடங்கிக்கொண்டார்கள். இவர்களது வயிற்றுப்பெருக்கத்துக்கு வழியில்லாமலிருந்தால் யாசகஞ் செய்து சீவித்தல் குற்றமாகாதே. ஒருவன், எழுதப் படிக்கவறியான், அவன் றந்தை வைத்தியனுமாவன், வைத்தியன் வீட்டிலே கூலிவேலைக்குத்தானும் இருந்து பயின்றவனு மல்லன், நோயின் காரணமறியான், நோயறியான, நோயின்குணமறியான், நோயாளியையுமறியான். இலையறியான மரமறியான் மருந்துமறியான். அவன்தான வியாதி பெற்றவைத்தியன் என்று புறப்பட்டால் சனங்களின் கதியென்னவாகும்? "தடியெடுத்தவனெல்லாந் தண்டற்காரன்" என்றவாறாக மருந்துப் பெட்டியொன்று அகப்பட்டாற் கண்டவரெல்லாம் வைத்தியனென்று புறப்பட்டு உலகத்தைக் கெடுக்கத்தலைப்படுகிறார்கள்.

வரும்

இங்ஙனம்

M. V. மனேச்சர்.

தன்வந்திரிமால்

சுற்பொக்கனை

அக்கிரகாரம்

## ஐயவினவுக்குவிடை.

எமது குருபீடமான சுற்பொக்கனை அக்கிரகாரத்திலே பிரசித்திபெற்று விளங்காநின்ற தன்வந்திரிமால் மானேசர் ஸ்ரீ. M. V. அவர்களை வினித்துச் சிலசந்தேகங் கேட்ட சந்துசித்தராம் (சகனானை) R. V. சர்மா அவர்களுக்கு.

சர்மாவேலமது முதலாம்பகுதிக்கேள்விக்கு கனம் பத்திராதிபரவர்களே தக்கவிடைபுரிந்து விட்டனராதலால் இரண்டாம்பகுதிக் கேள்விக்கு விடையிறுக்கு முன்னே என்னைக் குறித்துச் சில சொல் விளம்பி விட்டுப் பின்னது புகல்வேன். எனக்கு மூன்று சந்ததிக்கு முந்தியவர் கொழும்பார், கந்தர்ஐயா, குட்டிப்பிள்ளை, நாகமுத்து என்பவர்கள். நானே இசசந்ததியிற்கடையன். கொழும்பார் முன்னுக மூத்துவீருக மேற்படி M. V. அவர்களது முற்சந்ததியாரையே குருபீடமாகக் வைத்தியங் கற்று வருகிறோம். அந்த உரிமையைக் கொண்டு நானே விடைதரத் துணிந்தேன்.

1. மகாபஞ்சமூலமாவது—வில்வம், பெருங்குமிழ், பெருவாகை, பாதிரி, சிறுவழுதுணை, என்பவையே.

2. கண்டகத்தரி—கத்தரி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, நெருஞ்சில், என்பவை சிறு பஞ்ச மூலம்.

3. மத்திமபஞ்சமூலம்—சிற்றுமுட்டி, சாறணை, ஆமணக்கு, சரிப்பயறு, காட்டுளுந்து என்பவையே.

4. சீவனபஞ்சமூலம்—தண்ணீர் விட்டான் கிழங்கு, மேதா, சீவந்தி, சீவனம், ரிஷபகம்என்பவையே.

5. திருணபஞ்சமூலம்—தர்ப்பம், ஞாழல், கரும்பு, பேய்க்கரும்பு, சம்பாத்தாள் என்பவையாம்.

மற்றவிவரங்களை என்னையாவது என்குருபீடாதிபதியை யாவது நேரிற் கண்டுகொள்ளுவது நல்லது.

இங்ஙனம்

கா. க. முத்து, வைத்தியம்

பூநகோட்டம்.


# விளம்பரங்கள்.

## கற்பகவிருக்ஷம்.

இது தன்னையடைந்தவர்கள் என்னென்ன கேட்கின்றார்களோ அவற்றையெல்லாம் கொடுக்கும் தேவவிருக்ஷமாகும். முக்கியமாய் அழகை அதிகப்படுத்தக்கூடியது கூந்தலேயன்றி வேறல்ல. நீங்கள் உங்கள் தலைமயிர் உதிராமல் தடுக்கவும், கறுப்பாயும் பளபளப்பாயும், மிருதுவாயும் வளரச்செய்யவும் நல்ல கூந்தல் தைலங்களைத் தேடுகின்றீர்கள். நீங்கள் வேண்டியவற்றையும் முகதேஜஸையும் தேகபலம் முதலிய ஆயுளாரோக்கியத்தையும்தருவதில் கற்பக விருக்ஷத்திற்குச் சமமான

## மணித்தைலம்.

என்னும் வாசனைத் தைலத்தை வாங்கி உபயோகியுங்கள்.. தற்காலம் வெளிவரும் தலைவும் தைலங்கள் போலன்று. சாஸ்திரோக்தமாகச் செய்யப்பட்ட தைலமிது. மூளையைக் குளிர்ந்திருக்கச் செய்யவும் ஞாபக சக்தியை விர்த்திசெய்யவும் ஏற்ற தைலம் நமது மணிதைலம் ஒன்றுதான். இரவில் நித்திரைக்குப் போகுமுன் உள்ளங்கை உள்ளங்கால், சிரசு முதலான விடங்களில் 2 3- துளி தைல மத்த தேய்த்துக்கொண்டால் தேகசிரமம், ஆயாசம், அதிகயஷ்ணம் இவைகளை நீக்கி நல்ல தேகாரோக்கியத்தைக்கொடுக்கும். புட்டி 1-க்கு விலை ரூ 1-6-0.

## பொருத்தமானது.

அனேகர் பல மருந்துகளை விளம்பரஞ் செய்கிறார்கள். இக்காலத்துக்குஏற்றதாயிருக்கிறது. ஆனால் மெதுவாய்க் குணங்கொடுக்கும் மருந்தை உபயோகிப்பார்களா? அல்லது அதி சீக்கிரத்தில் அற்புத குணத்தைக்கொடுக்கும்,

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகிப்பார்களா? இச்சிறந்த ஒளஷதம், தேகபலம். மனோபலம், ஊக்கம், ஞாபகசக்தி, ஜீரணசக்தி முதலியவைகளைக் கொடுக்கின்றது. இன்னும் மேகரோகம், தலைவலி, நரம்புஸ்தானங்களின் தளர்வு சுருக்கிச்சொல்லில் சரீரசம்பந்தமான சகல ரோகங்களையும் நீக்குகின்றன. இம்மருந்தன்றோ ஜனசமூகத்துக்குப் பொருத்தமானது. 32-மாத்திரைக்கு விலை ரூபா 1.

வைத்தியசாஸ்திரி

மணிசங்கர்கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹஒளஷதாலயம்

157 பிராட்வே, மதராஸ்.

27, DAM STREET

COLOMBO.

# விளம்பரம்.

ஸ்ரீமத் கா. கந்தையாபிள்ளை

அவர்களியற்றிய

## சங்கீதத்திரட்டு.

### இரண்டாம் பாகம்

வெளியாகிவிட்டது!

வெளியாகிவிட்டது!!

இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பாட்டுகள் யாவும் புதிய பிளேட்டுகளிலிருந்து எடுக்கப்பட்டன. தென்பாங்கு, வேடிக்கைப் பாட்டுகள், தேவார திருவாசகங்கள் வேண்டியன அடங்கியிருக்கின்றன

விலை பிரதி ஒன்றுக்கு ரிங்கி 1—00.

தபால் கூலி 15.

## சங்கீதத்திரட்டு.

### முதற்பாகம்.

இதுவும் இரண்டாம் முறையாகத் திருத்திப் பதிப்பித்தோம்.

விலை பிரதி ஒன்றுக்கு ரிங்கி 1—00.

தபால் கூலி 15.

## சித்தாந்த ரத்நாகரம்.

இவ்வரிய பெயர்புனைந்து இற்றைக்குப் 15-வருடங்கட்கு முன்னர் சென்னை-நா கோசோமசுந்தர நாயகரவர்களால் வெளியிடப்பட்ட நூல்கள் பல. இவர் வைதிகசைவ சித்தாந்த சண்டமாருதம் என்னும் காரணப்பெயர் பெற்றோர் இந்நூல்களைப் படிப்போர் சைவசமயத்தின் உண்மைகளைத் தெளிவாயறிந்து கொள்ளும் இயல்புடையராவர். பிறமதப் பிரவேசஞ் செய்ய அஞ்சுவர்.

1—ஆசாரியப்பிரபாவம் 1-50.

இது நால்வர்சமயாசாரியர்களின் அவதாரத்தைப் பற்றிச் சொல்லிவரும்போதில் அவர்கள் ஏனையோரைப்போல் கருக்குழியில் புகுந்துவந்தவர்களல்ல வென்பதை விளக்கிக்காட்டும். ஆசாரிய சுவாமிகளின் பெருமையையும் வியந்துபேசும். ஒவ்வொருவரும் வாசித்தறியவேண்டிய நூல் இதுவாகும்.

2—சிவபாரம்யப்பிரதரிசினி 75 சேன்ட்.

இந்நூலிலே சிவபெருமானுக்குப் பிறமதத்தவர்கள் கூறுங் குற்றங்களுக்குப் பிரபல நியாயங் காட்டப்பட்டு ஒவ்வொன்றும் விரிவாய் மறுத்திருப்பது தோற்றும்.

3-சுக்லாம்பிரதாசலோகவிசாரம் 50 சேன்ட்.

இதில் பஞ்சாட்சரத்தின் மகிமை விளக்கப்பட்டிருக்கின்றது.

☞ வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

இந்தியா, இலங்கைக்கு வி. பி. சட்டம் இல்லை.

முற்பணம் அனுப்பினால், தபாற்கூலி இனாம்.

C. CANDIAH PILLAI
PROPRIETOR
KLANG PRINTING WORKS
KLANG


ஆதிரு தடக்கோழ்வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக், கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம் வாழ்கசெவ்வேள், ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்குவாழ்க, மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியரெல்லாம்.

Printed and published by V. Canapatip-Pillai for the Proprietor at The Vidyalaya Press Jaffna.